Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஆனி மீ 30 ஆம் உ சனிக்கிழமை (14 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 20 ஓசை 146

## கொக்காவில் மாண்ட படையினர் 65

(கொக்காவில்)

விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட கொக்காவில் இராணுவ முகாமிலிருந்து மேலும் இருபது சிறிலங்கா இராணுவ வீரர்களின் சடலங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் மீட்புவேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இரு நாட்களாக சுற்றிவளைக்கப்பட்டு வெற்றிகரமாக தாக்கப்பட்ட கொக்காவில் இராணுவ முகாமில் ஏற்கனவே எடுக்கப்பட்ட 45 இராணுவத்தினது சடலங்களுடன் மேலும் 20 சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மீட்பு வேலைகள் இன்னும் முடிவடையாததால் மேலும் ஏராளமான சடலங்கள் கைப்பற்றப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முகாமிலிருந்து அதிசக்தி வாய்ந்த ஆயுதங்களும் வெடிபொருட்களும் ஏராளமாக கைப்பற்றப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. (லோ)

# பிரேமா அரசுடன் டில்லி விவாதிக்கும்

## தமிழர் படுகொலை இந்திய அரசு ஆழ்ந்த கவலை!

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெறும் யுத்தத்தில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருப்பதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டிற்கு பெருமளவு அகதிகள் வந்துகொண்டிருப்பதால் இந்தக்கவலை ஆழ்ந்த கவலையாகிறது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து இலங்கையுடன் விவாதிக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழ்மக்கள்படுகொலைசெய்யப்படுவது சம்பந்தமாகவும் பெருமளவில் தமிழ் மக்கள் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு வருவது குறித்தும் தமிழ்நாடு மக்களினதும் அரசினதும் நிலைபற்றி பிரதமர் வி. பி. சிங்குடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லையென்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார். இதனால் நகர் வளர்ச்சித் துறை அமைச்சர் முரசொலி

(4ஆம் பக்கம் பார்க்க)

### உலர் உணவு விநியோகம்

அகதிகளுக்கும், இடம் பெயர்ந்தோர்களுக்கும் உலர் உணவு வழங்குவதற்கானவிபரம் வருமாறு தனி ஆளுக்கு ஒரு கிழமைக்கு -84ரூபா, இருவர் கொண்ட குடும்பம் - 154 ரூபா, மூவர் கொண்ட குடும்பம்- 210ரூபா, நால்வர் கொண்ட குடும்பம் 252ரூபா, ஐந்தும்அதற்கு மேற்பட்ட குடும்பம்- 315 ரூபா.

### மன்னார் 3 பலாலி 1 கோட்டை 1

(கொழும்பு)

மன்னாரில் நேற்று இடம் பெற்ற மோதலில் மூன்று படையினரும், யாழ். கோட்டையில் ஒரு சிப்பாயும் பலாலியில் ஒருவரும் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

# இராணுவ தீர்வே ஒரே வழியாம்!

## சிறிமா கூறுகிறார்

(கொழும்பு)

''வடக்குக் கிழக்கு மாகாணப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு இராணுவ நடவடிக்கைதான் ஒரேவழி'' என்று சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கொழும்பிலுள்ள ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தைநடத்திக்கொண்டே விடுதலைப்புலிகள் போரைத் தொடங்கியதாகவும் இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகளே முன்முயற்சி எடுக்க வேண்டுமென்றும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்ததாக இந்தியவானொலி தனது செய்தியில் தெரிவித்தது.

# நிலாவெளி காட்டுப் பகுதியில் புலிகள் ராணுவம் மோதல், 5 ராணுவம் பலி

## புலிகள் தரப்பில் இருவரும் வீரமரணம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை 10 ஆம் கட்டை இராணுவமுகாமில் இருந்தும், வெல்கம்இராணுவ முகாமில் இருந்தும் நிலாவெளி காட்டுப்பகுதிக்கு வந்த சிங்கள இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இக்கண்ணிவெடித் தாக்குதலால் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நேரடி மோதலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஈ. பி. ஆர். எல். எவ். இருபிரிவினர் அகதி முகாமுக்குள் மோதிக் காயம்

(திருச்சி)

திருச்சி கொட்டாரப்பட்டி அகதி முகாமில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) யின் இருபிரிவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்தனர், இது சம்பந்தமாக இந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒன்பதுபேர் கைது செய்யப் பட்டுள்ளனர்,

தமிழ் நாட்டுக்கு இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் நகரங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்த முகாங்களில் இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தாக்குதல் நடவடிக்கை எதிலும் ஈடுபடாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இந்த நிலையிலும் ஈ. பி. ஆர். எல். எவ்.

# ''தமிழருக்கு உணவு உடை உடன் அனுப்பவேண்டும்''

## மத்திய அரசுக்கு கிருஷ்ணய்யர் கோரிக்கை

# கோட்டை படையினருக்கு உணவு; தமிழ் மக்களுக்கு பீப்பாக்குண்டு

காரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டிற்கு பெருமளவு அகதிகள் வந்துகொண்டிருப்பதால் இந்தக்கவலை ஆழ்ந்த கவலையாகிறது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து இலங்கையுடன் விவாதிக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழ்மக்கள்படுகொலைசெய்யப்படுவது சம்பந்தமாகவும் பெருமளவில் தமிழ் மக்கள் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு வருவது குறித்தும் தமிழ்நாடு மக்களினதும் அரசினதும் நிலைபற்றி பிரதமர் வி. பி. சிங்குடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லையென்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார். இதனால் நகர் வளர்ச்சித் துறை அமைச்சர் முரசொலி

(4ஆம் பக்கம் பார்க்க)

...கோட்டையில் ஒரு சிப்பாயும் பலாலியில் ஒருவரும் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

# ஈ. பி. ஆர். எல். எவ். இருபிரிவினர் அகதி முகாமுக்குள் மோதிக் காயம்

(திருச்சி)

திருச்சி கொட்டாரப்பட்டி அகதி முகாமில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி. ஆர். எல். எவ்.) வின் இருபிரிவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்தனர், இது சம்பந்தமாக இந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒன்பதுபேர் கைது செய்யப் பட்டுள்ளனர்,

தமிழ் நாட்டுக்கு இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழ் மக்கள் இராமநாதபுரம், திருச்சி, மதுரை, சேலம் முதலிய தமிழ் நாடு நகரங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப் பட்டு வருகின்றனர். இந்த முகாங்களில் இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தாக்குதல் நடவடிக்கை எதிலும் ஈடுபடாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இந்த நிலையிலும் ஈ. பி. ஆர். எல். எவ். வைச் சேர்ந்த இருபிரிவினருக்கிடையில் இந்த மோதல் ஏற்பட்டது.

# “தமிழருக்கு உணவு உடை உடன் அனுப்பவேண்டும்”

## மத்திய அரசுக்கு கிருஷ்ணய்யர் கோரிக்கை

(சென்னை)

அண்மைக்காலமாக இலங்கையில் நடைபெற்று வரும் யுத்தத்தினால் பாதிப்புற்றிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உடனடியாக உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும் அனுப்புமாறு இந்திய மத்தியஅரசை இந்திய - இலங்கை நட்புறவுச் சங்கத் தலைவரும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமானதிரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் கேட்டுள்ளார்.

இவ்வுதவிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்மூலம் தனிப்பட்ட பொதுமக்கள் ஸ்தாபனங்களுக்கு வழங்கப் பட்டு பாதிக்கப்பட்ட தமிழ்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சோதனையின் பின்னரே தமிழகத்தில் அகதிகள் அனுமதி

## - கருணாநிதி தகவல்

(சென்னை)

தமிழ் நாட்டுக்கு வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் யாவரும் நன்கு சோதனையிடப்பட்ட பின்னரே இந்தியாவுக்குள் வர அனுமதிக்கப் படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ் நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று செய்தியாளரிடம் கூறினார்.

ஆயுதம் ஏந்திய தமிழ்ப் போராளிகள் எவரும் வர அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்காக தமிழ் அகதிகள் இங்கு வந்து கொண்டிருப்பதாகவும் கூடுதலான நிதி தேவைப்படுகிறது. இதனை மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டுள்ளது.

தமிழ் அகதிகளை இங்குதங்கவைக்க, அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பணிப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஹேமாபிரேமா பலாலி வந்தார்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமுக்குத் திடீரெனச் சென்று அங்குள்ள படையின

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் இரவில் விமானக் குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

கடந்த வியாழன் இரவு கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட படுமோசமான விமானத்தாக்குதலால் கிளிநொச்சி நகரிலும் அதைச்சுற்றியுள்ள இடங்களிலும் பல வியாபார நிலையங்கள் இடிந்து சேதமாகின.

மாலை 5 மணியளவில் கிளிநொச்சியை சுற்றி விமானம் ஒன்று ஒருமணி நேரத்திற்கு மேலாக வட்டமிட்டதால் மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரு இராணுவம் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பெரியமதுரங்குளம் என்ற இடத்தில் இடம் பெற்ற மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்கு ஐந்து சிறு முகாம்கள் இருப்பதாகவும் தொடர்ந்தும் கடும் சண்டை நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அகதிகளுக்கு உடை சேகரிப்பு

யாழ். பல்கலைக் கழக மாணவ மாணவிகள் திருக்கோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்த குடும்பத்தினருக்கு மாற்று உடைகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்

மூவர் நால்வர் கொண்ட குழுக்களாக மேற்படி மாணவர்களும் மாணவிகளும் கிராமம் கிராமமாகச் சென்று ஆடைகளை சேகரித்து அகதி முகாம்களுக்கு வழங்கி வருகிறார்கள். (75)

...விடுதலைப்புலிகள் போரைத் ...வேண்டுமென்றும் திருமதி ...யில் தெரிவித்தது.

# நிலாவெளி காட்டுப் பகுதியில் புலிகள் ராணுவம் மோதல், 5 ராணுவம் பலி

## புலிகள் தரப்பில் இருவரும் வீரமரணம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை 10 ஆம் கட்டை இராணுவமுகாமில் இருந்தும், வெல்கம்இராணுவ முகாமில் இருந்தும் நிலாவெளி காட்டுப்பகுதிக்கு வந்த சிங்கள இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இக்கண்ணிவெடித் தாக்குதலால் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நேரடி மோதலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டை படையினருக்கு உணவு; தமிழ் மக்களுக்கு பீப்பாக்குண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை ராணுவ முகாமிற்கு உணவுப் பொதிகள் போடப்பட்ட அதே வேளை யாழ். நகரப்பகுதியில் விமானக் குண்டு வீச்சுக்களும் நிகழ்ந்துள்ளது. இக்குண்டு வீச்சினால் 15வீடுகளுக்கு மேல் பெருஞ் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

நேற்று மாலை கோட்டை முகாமிற்கு உணவு போடுவதற்காக யாழ் நகரிற்கு மேலே பறந்த இரண்டு விமானங்களில் ஒன்று ராணுவ முகாமிற்கு உணவு போட்டுக் கொண்டிருந்த வேளை மற்ற விமானம் யாழ் குருநகர்ப் பகுதியில் குண்டு வீச்சுக்களை நடத்தியது. மாலை 5-30 மணியிலிருந்து நடந்த இக் குண்டு வீச்சுக்கள் மக்கள் நெரிசலாகவாழும் பகுதியி

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரவு நேரம் ஷெல்லடி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டையிலிருந்து நேற்றிரவு சரமாரியாக ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இதேசமயம் பலாலியில் இருந்தும் யாழ்.நகரை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

# ஆக்கிரமிப்பு மண்ணைப் பாதுகாக்க முதியவர் ஆவல்



தலைநரைத்து உடல தளர்ந்த நிலையிலும தமிழ் மண்ணை ஆக்கிரமித்திருந்தாலும் அரசாங்கம் கொடுத்த துப்பாக்கியுடன் முதிய சிங்களவர் வெலிஓயா திட்டமிட்ட குடியேற்றப்பகுதியில் நிமிர்ந்து உஷாராக நிற்கிறார். இங்கே தமிழீழத்தைக்சாப்பதற்கு இப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

# “யானைப் பசிக்கு சோளப் பொரி” போல லொறிகளில் வந்த உணவு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசினால் ஒரு மாதகால இடைவெளிக்குப் பின்னர் யாழ். மாவட்ட மக்களுக்கென 13 லொறிகளில் அனுப்பிவைக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களும் மருந்துப் பொருள்களும் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

## ஒருநாளைக்குக் கூடப்போதாது

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நீண்டநாள் முயற்சியின்பேரில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ள இவ் உணவுப் பொருட்கள்தற்போதையசூழ்நிலையில் மிகச்சிறிய அளவில் பங்கிட்டு விநியோகித்தாலும் யாழ். மாவட்ட மக்களுக்கு ஒரு நாளைக்கே போதியதாக இல்லை என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

## குழந்தைகளுக்கே பால் மாவும் சீனியும்

அரிசி, மாவு, சீனி, பால்மா போன்ற பொருட்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட இருக்கின்றன. பால்மாவும், சீனியும் சகலகுடும்பங்களுக்கும் வழங்க முடியாதிருப்பதால் குழந்தைப் பிள்ளைகள் உள்ள குடும்பங்களுக்கே வழங்கப்படும்.

இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அகதிகளும் வந்துசேர்ந்துள்ள இவ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

மானிப்பாய்பாலாவோடை என்ற இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை சத்தியமூர்த்தி யாகிய எனது தேசிய அடையாள, காரியாலய அடையாள அட்டைகளும் எனது பெயருக்கான காசோலையும் கச்சேரிக்கும் யாழ். நகருக்கிடையிலும் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். (R/ 515)

தம்பிமுத்து தம்பிநாதன் ஆகிய எனது அடையாள அட்டையும் தோள் பையும் புதன்கிழமை நல்லூர் கோயிலுக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் கீழ் கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். அடையாள அட்டை இல: 200170997V தம்பிநாதன் 'பிருந்தாவனம்' 37 /1 வைமன் றோட் யாழ்ப்பாணம். (R-516)

## உதவிக்கு வந்தவர் உபத்திரபமானார்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கில் வசிக்கும் திரு. சி. இராசையா என்பவர் தனது மொறீஸ் மைனர் காரைத் தள்ளி ஸ்ராட் ஆக்குவதற்கு வீதியால் சென்று கொண்டிருந்த ஒரு சிலரை உதவிக்கு அழைத்தார். அவர்கள் வந்து காரைத் தள்ளி ஸ்ராட் செய்தார்கள்.

அதில் ஒருவர், தானும் காரில் கொஞ்சத்தூரம் வருவதாகச் சொல்லிப் பின்சீற்றில் ஏறி அமர்ந்து விட்டார். கார் அரைமைல் தூரம் சென்றதும் நிற்பாட்டச் சொல்லி பின் சீற்றில் இருந்த நபர் நான்கு லீற்றர் பெற்றோலுடன் மாயமாக மறைந்து விட்டார். எவ்வளவோ கஷ்டப்பட்டு அதிக விலை கொடுத்து வேண்டிய பெற்றோல் திடீரென மாயமாகக் களவு போனதால் திரு. இராசையா மிக்க மன வேதனையுடன் காரைத் தொடர்ந்து செலுத்த முடியாத நிலையில் கவலையுடன் வீடு திரும்பியுள்ளார்.

இத்திருட்டுச்சம்பவம் கடந்த 9ஆம்திகதி திங்கட்கிழமை காலை நடைபெற்றது. (24)

## பண உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படும் இராணுவ நடவடிக்கைகளினால் காயமுற்ற, மர

# உங்கள் கையில் எங்கள் பலம்

# உணர்வோடு கருமமாற்றுங்கள்

-மகேந்திரராசா

(நீர்வேலி)

நீங்கள் சமுதாயத்திற்குச் செய்யும்சேவை என்று கருதி, உள்ளத்தில் கள்ளமில்லாமல் நிறைந்த தியாக உணர்வோடு கருமமாற்றுங்கள் உங்கள் கையிலேதான் எமது கட்சியின் எமது படையின் பலம் தங்கியுள்ளது. மதில் மேல் பூனையாக இருப்பவர்கள் வழிவிட்டு விலகிநின்றால் நிற்கட்டும் விசுவாசமுள்ளவர்களின் சேவை சிறப்பாக அமையும் என்றார்.

கோப்பாய் வட்டவைக்குட்பட்ட சிற்றூரவை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது மேற்கண்டவாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா மாத்தயா பேசுகையில் தெரிவித்தார்.

மேலும் இக் கூட்டம் யாழ்மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் ராஜன் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் மக்கள் முன்னணி உறுப்பினர் திரு.தேவா, மகளிர் அவை உறுப்பினர் விஜிதா ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## இருப்பிட வசதியின்மையால் உத்தியோகத்தர்கள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இன்றுள்ள நெருக்கடி நிலையில் வேலைக்கு திரும்பிய முல்லைத்தீவு கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் உணவு இருப்பிட வசதியின்றி மீண்டும் வேலை செய்ய முடியாமல் யாழ். திரும்பியுள்ளனர்.

மீண்டும் திரும்பியுள்ள உத்தியோகத்தர்கள் பலர் யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்தைச் சந்தித்து அங்குள்ள நிலைமையை விளக்கியுள்ளனர். அத்துடன் தமக்கு சம்பள முற்பணம் வழங்கும் படியும் கேட்டுள்ளனர்.

இவர்களின் இவ்வேண்டுகோளை அடுத்து கல்விப் பணிப்பாளர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் இவ் உத்தியோகத்தர்கள் தமது கையொப்பத்தை யாழ். கல்வித்திணைக்களத்தில் இட்டு வரவை உறுதிப்படுத்துகின்றனர்.

## திருமலை அகதிகளுக்கு பால்மா மரக்கறி உதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலுள்ள திருமலை அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் மரக்கறிகள், பால்மா, சவர்க்காரம், மெழுகுதிரி போன்ற பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

அங்குள்ள பிரசவத்தாய்மாருக்கு பிரசவத்தின் போது செலுத்தப்படும் ஊசி மருந்துகளும் மற்றும் சுகாதார வசதிகளும் போதாதிருப்பதால் கை வைத்தியம் செய்வதற்கான சரக்குப் பொருள்கள் அவசியம் தேவைப்படுகின்றதாம்.

உள்ளிப்பூடு, மிளகு, சீரகம்' மல்லி, மஞ்சல், செத்தல்மிளகாய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், தேன் போன்றவை அவசியம் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மலேசிய ஓய்வூதியக்காரருக்கு வங்கிகளுக்கு பற்றுச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இதுவரை காலமும் அவரவர் வீட்டு விலாசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் தற்போதய நெருக்கடி நிலை காரணமாக இவ்வாறு அனுப்புவதில் பல சிரமங்கள் இருப்பதினால் நிலைமை சீரடையும்வரை அந்தந்த வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும் என்பதையும் ஜூன்மாத பற்றுச் சீட்டுக்கள் நேற்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பதையும் செயலக ஓய்வூதியப் பிரிவு அறியத்தருகிறது.

## அபராதம்

(கொழும்புத்துறை)

சுன்னாகத்தில் மா, சீமெந்து விலை கூட்டி விற்றுக் கொள்ளை லாபம் தேட முயன்ற வர்த்தகர் ஒருவருக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (24)

### முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து

## அகதிகள் தொகை அதிகரிப்பால் சுகாதார சேவை சீரழிந்துள்ளது

(முல்லைத்தீவு)

ஏற்கனவே வைத்திய வசதிகள்பற்றாக்குறையாக இருந்த முல்லைத்தீவில் திருமலை அகதிகள் வந்து குவிவதை அடுத்து அங்கு சுகாதார வசதிகள் மிக மோசமான நிலை அடைந்துள்ளன என்று குமுழமுனை கிராம அபிவிருத்திச் ...ருக்குமேல் செம்மலை, அலம்பில், குமுழமுனைப் பகுதிகளிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் தங்கி உள்ளனர். ஏற்கனவே வைத்திய சேவை பற்றாக்குறையாக உள்ள இப் பகுதிகளில் மேலும் திருமலை அகதிகள் வருகையால் வைத்... ...னுப்பப்பட்ட மருந்துகள் மிகக்குறைவாகவும் அவற்றில் சில பாவிக்கவேண்டிய காலம் கடந்தவையாகவும் உள்ளன. இதேவேளையில் இவர்கள் கொண்டுவந்த மருந்துகளில் தற்போதைய தேவைக்கு அவசியமான மருந்துகள் இல்லை

## புங்குடுதீவில் மீண்டும் மின்சாரம்

(புங்குடுதீவு)

கடந்த ஒரு மாதமாக இருளில் கிடந்த புங்குடுதீவு தற்போது கிடைக்கப் பெற்ற மின்சாரத்தினால் ஒளிமயமாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலைமையைத் தொடர்ந்து இப்பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருந்தது. மின்சாரசபை ஊழியர்களின் முயற்சியினால் இப்பகுதிக்கு இம்மாதம்பதினொராம்திகதி நண்பகல் முதல் மீண்டும் மின்சாரம் கிடைத்துள்ளது.

இதனால் இங்கு தடைப்பட்டிருந்த மின்சாரம் தொடர்புடைய வேலைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இதனையிட்டு இங்கு வாழும் மின் பாவனையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (22)

## படகு சேவை இடை நிறுத்தம்

(புங்குடுதீவு)

கடந்த திங்கட்கிழமையிலிருந்து குறிகாட்டுவான் - நெடுந்தீவு படகுசேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நயினாதீவில் உள்ள ஶ்ரீலங்கா கடற்படையினரால் மேற்படி சேவையில் ஈடுபட்டுவந்த வலம்புரி படகு அபகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இச் சேவை இடைநிறுத்தப்பட்டது.

அத்துடன் இச்சேவையில் ஈடுபட்டு வந்த பயணிகள் படகான குமுதினியும் அச்சம் காரணமாக சேவையில் ஈடுபடுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் நெடுந்தீவுக்கு செல்ல வந்த பயணிகள் மிகவும் அவஸ்தைப்படுகின்றனர் (22)

## தையல் பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி)

தையல் பயிற்சிபெற்ற 25 இளம் யுவதிகளுக்கு கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழகம் 25 தையல் இயந்திரங்களை கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இதற்காக இம் மாவட்டத்தின் சகல பகுதிகளிலுமிருந்தும் வறிய இளம் யுவதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கு வேண்டிய பணத்தில் கூடிய பகுதியை இலங்கை வங்கி கடனாக வழங்குகிறது. மிகுதிப் பணத்தை மேற்படி கழகம் வழங்குகிறது. (49)

## அலங்கார

### தமிழ் மக்கள்

## பழைய நிலைக்கு திரும்ப வேண்டும்

- சந்திரன்

(கிளிநொச்சி)

தமிழ்மக்கள் பழைய நிலைக்கு திரும்ப வேண்டும். எமது மூதாதையர்கள் மின்சார வெளிச்சத்தில் வாழவில்லை. எரிபொருளைப் பாவித்து உழவு இயந்திரங்கள் மூலம் வயல்களை உழவில்லை. நாம் எமது சொந்தக் காலில்நின்று போராடுவோமேயானால் எமக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும். தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை.

துணுக்காய், பாண்டியன் குளம் வட்ட அவை உறுப்பினர்கள் மத்தியில் பேசிய விடுதலைப்புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஆர்.சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் வவுனிக்குளப்பிரதேசப் பொறுப்பாளர், செல்வன் இ.நிமால். முகிலன் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். திரு. சந்திரன் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி இன்று சகல மக்களையும் விடுதலைப் போராட்டத்தில் இணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் மனமுவந்து தமது பிள்ளைகளை இப் போராட்டத்தில் ஈடுபடுத்த முன் வர வேண்டும். அப்போதுதான் தமிழீழம் மலரும்.

ஒவ்வொரு பொது மக்களும் இதய சுத்தியோடும், தியாக மனப்பான்மையோ செயல் பட வேண்டும். போராட்டத்தின் போது ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும் இது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

போராட்ட நிதி என்ற பெயரில் தமிழ் மக்களை அழிக்க அரசு பலகோடிரூபாய்களை பொது மக்களிடமிருந்து திரட்டி வருகிறது. மக்களும் மனமுவந்து பணத்தைக் கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் நாம் எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

இனவாத அரசை எதிர்த்துப் போராட எமக்கும் பல கோடி ரூபாக்கள் தேவைப்படுகிறது. எமது மக்கள் அதை மனமுவந்து தந்து உதவவேண்டும். ''தமிழீழ மீட்பு நிதியைப்'' பெற்றுத்தர சகல சிற்றூர் அவை உறுப்பினர்களும் வட்டஅவை உறுப்பினர்களும்கடுமையாகப் பாடுபடவேண்டும்.

எம்மிடம் போதிய கால்நடைகள் உண்டு. அதன் சாணத்தை உபயோகித்து ''பயோகாஸ்'' உற்பத்தியில் ஈடுபட வேண்டும். அதன் மூலம் நாம் பல நன்மைகளைப்பெற முடியும் என்றார். (49)

## சென் ஜோன் அம்புலன்ஸ் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் சென் ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவின் அனைத்து அங்கத்தவர்களின் விசேட கூட்டம் இன்று சனிக்கிழமை பகல் 10 மணியளவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பொறுப்பாசிரியரும் கல்லூரி அதிபர் கே.எஸ். குகதாசனும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

## லயன்ஸ் கழக அன்பளிப்பு

(ஈச்சமோட்டை)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துக்குகொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ்கழகம் மூன்று சில்லு சைக்கிள் இரண்டினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தின் இந்த அன்பளிப்புக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் தியாகராசா நன்றி தெரிவித்துள்ளார். (43)

## இன்ரறக்ட்கழகம் துண்டுப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

பரி. யோவான் கல்லூரி இன்ரறக்ட் கழகம் குண்டு வீச்சிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாக்கும் வழி வகைகள் பற்றிய அறிவித்தல் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. காயமடைந்தோர்களைக் காப்பாற்றும் வழிமுறைகளும் மேற்படி பிரசுரத்தில் இடம் பெற்றுள்ளன.

கார் அரைமைல் தூரம் சென்றதும் நிற்பாட்டச் சொல்லி பின் சீற்றில் இருந்த நபர் நான்கு லீற்றர் பெற்றோலுடன் மாயமாக மறைந்து விட்டார். எவ்வளவோ கஷ்டப்பட்டு அதிக விலை கொடுத்து வேண்டிய பெற்றோல் திடீரென மாயமாகக் களவு போனதால் திரு. இராசையா மிக்க மன வேதனையுடன் காரைத் தொடர்ந்து செலுத்த முடியாத நிலையில் கவலையுடன் வீடு திரும்பியுள்ளார்.

இத்திருட்டுச்சம்பவம் கடந்த 9ஆம்திகதி திங்கட்கிழமை காலை நடைபெற்றது. (24)

## பண உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படும் இராணுவ நடவடிக்கைகளினால் காயமுற்ற, மரணமடைந்தவர்களுக்கு கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழகம் பண உதவி செய்து வருகிறது.

கிளிநொச்சியின் கிழக்குப் பகுதியில் வாழுபவர்கள் மேற்படி கழகத்தின் செயலாளர் ஐ. நடராசா பொருளாளர் பொன். நித்தியானந்தன் ஆகியோரோடும், மேற்குப் பகுதி மக்கள் கழகத் தலைவர் எஸ். சிவராஜலிங்கத்துடனும் தொடர்புகொண்டு பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். (49)

அவரவர் வீட்டு விலாசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் தற்போதய நெருக்கடி நிலை காரணமாக இவ்வாறு அனுப்புவதில் பல சிரமங்கள் இருப்பதினால் பற்றுச் சீட்டுக்கள் நேற்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பதையும் செயலகம் ஒய்வூதியப் பிரிவு அறியத்தருகிறது.

சீமெந்து விலை கூட்டி விற்றுக் கொள்ளை லாபம் தேட முயன்ற வர்த்தகர் ஒருவருக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (24)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து

# அகதிகள் தொகை அதிகரிப்பால் சுகாதார சேவை சீரழிந்துள்ளது

(முல்லைத்தீவு)

ஏற்கனவே வைத்திய வசதிகள்பற்றாக்குறையாக இருந்த முல்லைத்தீவில் திருமலை அகதிகள் வந்து குவிவதை அடுத்து அங்கு சுகாதார வசதிகள் மிக மோசமான நிலை அடைந்துள்ளன என்று குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. சி. இராஜேஸ்வரன் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளதாவது;

''தற்போது ஏற்பட்டுள்ள அசம்பாவிதத்தினால் திருமலை மாவட்டத்திலிருந்து ஏறக்குறைய 40,000 தமிழ் மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இவ்அகதிகளில் அரைவாசிப் பங்கினருக்குமேல் செம்மலை, அலம்பில், குமுழமுனைப் பகுதிகளிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் தங்கி உள்ளனர். ஏற்கனவே வைத்திய சேவை பற்றாக்குறையாக உள்ள இப்பகுதிகளில் மேலும் திருமலை அகதிகள் வருகையால் வைத்தியசேவை சூனியமாகி விட்டது.

இச் சந்தர்ப்பத்தில் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வைத்திய தொண்டர்களை இப்பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளது. ஆனால் இந்த வைத்திய தொண்டர்களிடம் கொடுத்தனுப்பப்பட்ட மருந்துகள் மிகக்குறைவாகவும் அவற்றில் சில பாவிக்கவேண்டிய காலம் கடந்தவையாகவும் உள்ளன. இதேவேளையில் இவர்கள் கொண்டுவந்த மருந்துகளில் தற்போதைய தேவைக்கு அவசியமான மருந்துகள் இல்லை என்றும் தெரியவருகிறது.

''எனவே தமிழ் மக்களின் நலன் கருதி அகதிகளுக்கும், நோயுற்றிருக்கும் பொதுமக்களுக்கும் உண்மையான வைத்திய சேவையை வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.''(75)

மது உற்பத்தி நிறுவனங்கள்

# மக்கள் சேவை நிறுவனங்களாக மாற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

பட்டினி வாழ்க்கைகுத் தள்ளப்பட்டுள்ள எமது தமிழ் இனத்தின் அத்தியாவசிய பண்டமான உணவுப் பண்டங்களை, பனை, தென்னை வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்தி மக்களின் அவசிய தேவைக்குரிய வெல்லம், சீனி, பாணி, பனாட்டு ஒடியல்மா, புழுக்கொடியல் ஆகியவற்றை உற்பத்தி செய்தும், கொள்வனவு செய்தும் எமதுதேவையைப்பூர்த்திசெய்வதுடன் பாதிப்புள்ளாகி பசிப்பிணியில் வாழும் மக்களுக்கு உதவுவதற்கு எமது நிறுவனத்தின் மனிதவலுவின் வினைத்திறனை முழுமையாகப் பயன்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைவரும் முன்வர வேண்டும். இவ்வாறு வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் கி. சிவநேசன் மேற்படி கூட்டுறவுச் சங்கங்களைப் பணித்துள்ளார்.

தொடர்ந்து அவர் பணிப்புரையில் கூறப்பட்டிருப்பதாவது:

எமது நிறுவனங்கள் மது உற்பத்தி நிறுவனங்கள் என்னும் நிலையிலிருந்து மக்களுக்குச் சேவை செய்யும் நிறுவனம் என்னும் பெருமையைப் பெற வேண்டும். இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் சார்ந்த அனைத்து மட்டத்தினரும் அயராது உழைத்து எம்மினத்தின் விடுதலைக்கான போராட்ட காலத்தில் எமது நிறுவனம் சார்ந்த பங்களிப்புகளையும் முழுமையாகச் செலுத்த முன்வரல்வேண்டும்.

இவ்வாறு அப்பணிப்புரையில் கூறப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

(புங்குடுதீவு)

கடந்த பத்தாம் திகதி வல்வைக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படை யுத்தக்கப்பல் மீது கரும்புலித்தாக்குதல் நடாத்தி வீரமரணமடைந்த கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் [illegible] வினோ, கப்டன் [illegible]லின்ஸ் ஆகிய வேங்கைகளுக்கு புங்குடுதீவு மக்கள் தமது கண்ணீர் அஞ்சலிகளையும், வீரவணக்கங்களையும் தெரிவிக்கின்றனர்.

வீதிகள் எங்கும் தோரணம் கட்டியும், சோக இசை எழுப்பியும் கறுப்புக் கொடிகளை தூக்கியும் கரும்புலிகளுக்கு தமது அஞ்சலிகளை செலுத்துகின்றனர். (22)

## அலுவலக இடமாற்றம்

(கொழும்புத்துறை)

வலிவடக்கு(தெல்லிப்பழை) உதவி அரசாங்க அதிபர் பணிமனை மல்லாகம் மகாவித்தியாலயத்திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (24)

## தையல் பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி)

தையல் பயிற்சிபெற்ற 25 இளம் யுவதிகளுக்கு கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழகம் 25 தையல் இயந்திரங்களை கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இதற்காக இம் மாவட்டத்தின் சகல பகுதிகளிலுமிருந்தும் வறிய இளம் யுவதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கு வேண்டிய பணத்தில் கூடிய பகுதியை இலங்கை வங்கி கடனாக வழங்குகிறது. மிகுதிப் பணத்தை மேற்படி கழகம் வழங்குகிறது. (49)

## அலங்கார உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு வல்லன் அருள்மிகு ஸ்ரீ நாகேஸ்வரி அம்பாள் சமேத நாகேஸ்வரப் பெருமான் அலங்கார உற்சவம் இம்மாதம் பன்னிரண்டாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்துபத்துநாட்களுக்கு நடைபெறுகிறது.

இம்மாதம் இருபத்தோராம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். அன்றைய தினம் நாகேஸ்வரப் பெருமானின் ஊர்வலமும் இடம் பெறும். (22)

## ஆங்கில வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புகுமுகமாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் சென்ற திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் முன்பு நடைபெற்ற இவ் வகுப்புகள் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு அருகாமையில் உள்ள சாதனா பாடசாலையில் இடமாற்றம் செய்யப்பட்டு நடந்து வருகின்றதுஎன பொறுப்பாசிரியர் டி. ஆர். அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

## வியாபாரிகளுக்கு நஷ்ட ஈடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சந்தை எரிக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்ட 240 சந்தை வியாபாரிகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பாதிக்கப்பட்ட இச் சந்தை வியாபாரிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம் ஆகியவற்றிடம் பண உதவி கேட்டுள்ளது. (49)

இந்துக் கல்லூரியில் இடம் பெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பொறுப்பாசிரியரும் கல்லூரி அதிபர் கே.எஸ். குகதாசனும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

## லயன்ஸ் கழக அன்பளிப்பு

(ஈச்சமோட்டை)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துக்குகொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ்கழகம் மூன்று சில்லு சைக்கிள் இரண்டினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தின் இந்த அன்பளிப்புக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் தியாகராசா நன்றி தெரிவித்துள்ளார். (43)

நடைகள் உண்டு. அதன் சாணத்தை உபயோகித்து ''பயோகாஸ்'' உற்பத்தியில் ஈடுபட வேண்டும். அதன் மூலம் நாம் பல நன்மைகளைப்பெற முடியும் என்றார். (49)

## இன்ரறக்ட் கழகம் துண்டுப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

பரி. யோவான் கல்லூரி இன்ரறக்ட் கழகம் குண்டு வீச்சிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாக்கும் வழி வகைகள் பற்றிய அறிவித்தல் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. காயமடைந்தோர்களைக் காப்பாற்றும் வழிமுறைகளும் மேற்படி பிரசுரத்தில் இடம் பெற்றுள்ளன.


எமது அன்பான வாடிக்கையாளர்களே!
மாணவ மணிகளே!!
ஆசிரியப் பெருந்தகையோரே!!!

வாடிக்கையாளரின் நன்மை கருதி எமது புத்தக நிலையம் நல்லூர் சிவன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது என்பதை பணிவுடன் அறியத் தருகிறோம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்.

(B/1243)


## முக்கிய அறிவித்தல்

வெளி மாவட்டத்திலிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு உதவும் வகையிலும், கல்வி சம்பந்தமாகவும் ஒரு கலந்துரையாடல் நடத்துவதற்காக எமது கல்வி நிறுவன ஆசிரியர்களும், மாணவர்களும் விக்னா கல்வி நிறுவன மண்டபத்தில் 16-7-1990 காலை 9 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கோரப்படுகின்றனர்;

— அதிபர்

(B. 1251)

## அரசாங்க அறிவித்தல்
## சுகாதார சேவைகள்

மலேரியா தடுப்பு இயக்க பிரதேச காரியாலயம்
தற்காலிக இடமாற்றம்

மேற்படி காரியாலயம் தற்காலிகமாக இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலய வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.

ந. கனகசபை
யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B/1253)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 28 — 04 — 1963

மறைவு 14 — 07 — 1989

திருமதி கத்தறீன் (கலா) அழகராஜா

ஒளிச்சுடர் அணைந்து ஆண்டொன்று கழிந்ததோ
ஓராண்டு சென்றிடினும் உன் சிரிப்பொலிகள் கேட்குதம்மா
உன்முகதரிசனம்தான் நீ விட்டுச்சென்ற மழலையில்
- தெரியுதிங்கே

ஆண்டுகள் பல சென்றாலும் உன் நினைவுகள் எமது
குடும்பத்தில் என்றும் ஒளி ஏற்றிநிற்குமம்மா

கணவன், மகள்,
உற்றார், உறவினர்.

நாவற்குழி கிழக்கு,
கைதடி.

(R/ 510)

## சிந்தனைக்கு

அறிந்து உணரமுடியாததை, ஆட்கொண்டு உடைமையாக்க முடியாது.

- யோகன் சேத்தே

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 14-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## அந்த "பாச்சா" இங்கே பலிக்காது!

ஒரு மூதாட்டி இறந்து போனார். ஊரவர்கள் பலரும் மரண வீட்டுக்குச் சென்று தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர். மூதாட்டியின் மகனிடம் துக்கம் விசாரித்த ஒருவர், ''இந்த அம்மா உனக்கு மட்டும் தாயாக இருக்கவில்லை; எங்களுக்கெல்லாம் தாயாக, இந்த ஊருக்கே தாயாக விளங்கினார்'' என்று ஆறுதல் சொன்னார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு முட்டாள் இப்படித்தான் துக்கம் விசாரிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். அவனது நண்பனின் இளம் மனைவி திடீரென்று மரணமானாள். மரண வீட்டுக்குச் சென்ற அந்த முட்டாள் ''உன் மனைவி உனக்கு மட்டுமா......'' என்று துக்கம் விசாரித்து வாங்கிக் கட்டிக்கொண்டு எதை எங்கே பேச வேண்டுமென்று பாடம் படித்துக்கொண்டான்.

சிறிலங்கா ஜனாதிபதியும் அவரது சகா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் அந்த முட்டாள் படித்த பாடத்தை இப்போதே படிக்க ஆரம்பித்திருக்கின்றனர். விரைவில் முழுமையாகக் கற்றுக்கொள்வார்களென்று எதிர்பார்க்கலாம்.

ஜே. வி. பி. யினருக்கு நேர்ந்த கதியே விடுதலைப் புலிகளுக்கும் ஏற்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறியிருந்தார். இதையே அவரது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இப்பொழுது அடிக்கடி சொல்லி வருகிறார்.

இவர்கள் சொல்வதுடன் மட்டுமல்ல சில இடங்களில் பழைய பாணியில் செயலிலும் இறங்கியுள்ளனர்,

தென்னிலங்கையில் ஜே வி. பி என்று சந்தேகிக்கப் பட்டவர்களையும்ஜே.வி பி. ஆதரவாளர்கள் என்றுசந்தேகிக்கப் பட்டவர்களையும் வெட்டியும் சுட்டும் குற்றுயிருடன் ரயர் போட்டுக் கொழுத்தியும் அட்டகாசம் செய்ததுபோல இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் கல்முனையிலும் மட்டக்களப்பிலும் செய்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் ஜே. வி. பி யினர் அல்லர் என்று இராணுவ உயர் அதிகாரிகள் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்திருந்தும் ஜே. வி. பி.யை அழிப்பதற்கு (அழிந்துவிட்டதா?) கையாண்ட அதே பாணியைக் கையாண்டு தமிழ் மக்களை அழிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிடலாமென பிரேமதாசா அரசு கனவு காண்கிறது.

ஜே. வி. பி.யின் நோக்கமும் இலட்சியமும் வேறு; விடுதலைப் புலிகளின் இலட்சியம் வேறு என்பதை பிரேமதாசா அரசு இன்னமும் தெரிந்து கொள்ளாதது

# "தேனீக்களின்" இடம் பெயர்ந்தோர் முகாம்

# ஓர் மனித நேய சேவை

ஜூலை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புலம் பெயர்ந்தோர் பற்றிய செய்தி சேகரிக்க திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்துக்குச் சென்றோம். கால்கடுக்க ஒரு 'சென்றி' காத்திருந்தார். அனுமதி பெற்று உள்ளே நுழைந்தோம்.

அலுவலகத்தில் வாட்ட சாட்டமான ஒரு இளைஞர் நாற்காலியில் உட்கார்ந்திருக்க அவரைச் சுற் ஏழெட்டுத் தேனீக்கள் (தொண்டர்கள்) மொய்த்துக்கொண்டு நின்றார்கள்... அவரின் வலக் கைப்பக்கத்தில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட துணி வகைகள் அவரை அணுகி புலம்பெயர்ந்தோர்களைப் பற்றிய விபரங்களைக் கேட்டோம்.



முகாமின் பொறுப்பாளர் என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட ஐங்கரநேசன் உடனே பரபரப்பாகப் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

ஜூன் மாதம் 29ஆம் திகதி இந்த முகாமை ஆரம்பித்தோம். உடன் பிறப்புகளையும், பொருள்பண்டங்களையும் இழந்து அகதிகளான பலர் இங்கு இருக்கிறார்கள். இவர்களைப் பராமரிப்பதற்கு தாம் பணமாக எதையும் எதிர்பார்ப்பதில்லை பொருட்களாகத்தான் எதிர்பார்க்கிறோம். நாவலர் வீதி, பருத்தித்துறை வீதி, ஆடியபாதம் வீதி, கே. கே. எஸ். வீதிகளை உள்ளடக்கிய பகுதி மக்களின் ஆதரவுடன் தான் இம்முகாமை நாம் நிறுவியுள்ளோம் பொது நிறுவனங்களும் எமக்கு ஆதரவு தருகின்றன. சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை ஊழியர்கள், ஸ்ரீ சேவாஸ்சிரம கலாசார சங்கம், குரும்பசிட்டி சன்மார்க்க சபை, கோண்டாவில் மேற்கு பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

''உம்... இவர்கள் காலை 9 மணிமுதல் நண்பகல் வரை சேவையாற்றுகிறார்கள். அவசியம் ஏற்படும் போதெல்லாம் அயலிலுள்ள டொக்டர்களும் உதவி செய்கிறார்கள். இவர்களைவிட இரண்டு பேரைச் சம்பளம் கொடுத்து வேலைக்கு அமர்த்தியுள்ளோம். ஒருவர் தொற்று நீக்கிகளைத் தெளித்து சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளார். மற்றவர் நன்கொடையாகக் கிடைக்கும் துணிமணிகளைக் கவனிக்கிறார். தேவைக்கதிகமான உடுப்புகள் முல்லைத்தீவு முகாம்களுக்கு அனுப்பி வைக்கிறோம் என்றார் ஐங்கரன்.

அருகே சமையலறை இருப்பதாக அறிந்து அங்கே சென்றோம். அடுப்பு நெருப்புச் சீட்டில் யூனிவேர்சல் மாணவர்கள் உடம்பு முழுக்க வியர்த்துப் போயிருந்தார்கள். காட்சியை நம்பமுடியவில்லைத்தான். யூனிவேர்சல் மாணவர்கள் நளபாகத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அனுப

மணிகள் ஆகியன தந்து உதவியுள்ளார்கள் என்று பொறுப்போடும், கவலையோடும் குறிப்பிட்டார்,

இனி, மனதில் ஒட்டிக் கொண்டிருக்கும் கொஞ்ச நஞ்ச சந்தேகங்களையும் போக்கும் வகையில் முகாமைச் சுற்றிப்பார்க்க ஆயத்தமாக அலுவலகத்திலிருந்து வெளியில் வந்து நோட்டமிட்டோம். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர் சிலர் சீருடையில் மகாவித்தியாலய வளாகத்தில் நடமாடினார்கள்.

தவர்கள் பப்படப் பொரியல், சோயாக்கறி, சாம்பார் ஆகியவற்றை ஆக்கிக் கொண்டிருந்தார்கள்.

''நிஜமாகவே மாணவர்கள் தான் சமையல் செய்கிறார்கள். சுழற்சி முறையில் 25 பேர் சமையல் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்'' என்றார் ஐங்கரன்.

### தெரிந்த கதை- தெரியாத விடயங்கள்

''விரும்பினால் நீங்கள் வந்து அவர்களுடன் பேசலாம்'' என்றார் ஐங்கரன். ஆர்வம் உந்த போய்த்தான் பார்த்துவிடுவோமே என்று அகதிகள் தங்கியுள்ள விசாலமான மண்டபத்துக்குள் நுழையும்போது சிறார்கள் அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஏதோ ஓர் இனம் தெரியாத பீதி சிறார்களின் முகத்தில் ஒட்டிக் கொண்டிருந்தது. சிறார்களை விடப் பெண்களும் ஆண்களுமாக பலர் அங்கிருந்தனர். அங்கு நின்ற நடுத்தர வயதுடைய பெண்ணுடன் பேச்சுக் கொடுத்த போது, ''இவ்வளவு பெரிசா நடக்குமென்று எங்களுக்குத் தெரியாது. 13 ஆம் திகதி இரண்டு மணிபோல் வந்த இராணுவத்தினர் எமது பல சரக்குக் கடையைக் கொழுத்தினார்கள் ஷெல் தாக்குதல் நிலைமை விபரீதமாகியது. ஷெல் அடி நீடித்தது. அதில் சிலர் இறந்தும் போனார்கள். 7 ஆம் கட்டையிலும் ஷெல் விழுந்தது. 35 பேர் இறந்து போனார்கள்.

இப்பெண்ணின் சொந்த ஊர் திருக்கோணமலையில்

போதாதென்று இவரது கணவன் வீட்டில்வைத்துச் சுருட்டு சுற்றி விற்று தாயும், நான்கு பிள்ளைகளினதும் வயிற்றைக் கழுவுகிறார். முதல் பிள்ளைக்குப் 11 வயது. கடைசிப் பிள்ளைக்கு 1 வயது நாளை 7 ஆம் திகதி (சனிக்கிழமை) பிறந்ததினமென்றார் சற்றுத் தடுமாறிப் போன நிலையில் பிள்ளைகள் திருக்கோணமலையில் நாமகள் வித்தியாலயத்தில் படிக்கிறார்களாம்.

அந்தப் பெண் தொடர்ந்து கூறினார். ஷெல் அடி தீவிரமாய் நடந்த போது 13 ஆம்



திகதியன்று உப்புவெளியை விட்டு வெளியேறி சாம்பல் தீவுக்கு ஓடத் தொடங்கினோம். எம்மோடு சேர்ந்து

தோறும் ஷெல்கள் விழுந்தன, வீடுகள் எரிந்து கொண்டிருந்தன.

இப்படியொரு பயங்கரத்தை அந்தப் பெண்மணி தன் அனுபவத்தில் சந்திக்கவில்லைப் போலும். அப்பப்பா! அந்தப் பயங்கரத்தைக் கூறும் போது அவர் உடல் நடுங்கியது.

திருநெல்வேலி என்றதுமே காய்கறிச் சந்தையும், சனக் கூட்டமும்தான் நினைவுக்கு வந்து போகும். ஆனால் இப்போது வேறு. திருநெல்வேலியை அடுத்துள்ள யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயக் கட்டடத்தில் கந்தர்மடம் யூனிவேர்சல் (தனியார்) கல்வி நிறுவனம் சமூகசேவைப் பிரிவான தேனீக்கள் மனித நேயத்துடன்நடாத்தும்இடம்பெயர்ந்தோருக்கான முகாம் இக்கட்டான இந்த நேரத்தில் தேனீக்கள் எடுத்த ஒரு நல்ல முடிவு- இடம் பெயர்ந்தோர் முகாம்.

## நக்கீரன்

அச்சம் தரும் இரவின் இருட்டிலும், எறிக்கும் வெயிலிலும் கால் நடையாக நடந்துள்ளார்கள். சாம்பல் தீவில் சொற்ப நாட்கள், பின்பு நிலாவெளி ,திரியாய்.... இப்படியாகக் கால் நடையாகப் புலம் பெயர்ந்து நடந்துள்ளார்கள். கிராமங்களில்

அவர்கள் தங்கியிருந்த நாட்கள், திகதி ஒன்றும் தெரியாது. இது தடுமாறிய உண்மை. தீர்த்தக்கரையிலிருந்து அளம்பிலுக்கு வர ரூபா 150/- ஓட்டிகள் வசூலித்தார்களாம். இது எரிகிற வீட்டில் கொள்ளி பிடுங்கிய கதை. முதலாம் திகதி (ஜூலை) அளம்பிலை அடைந்து அங்கிருந்து வாகனத்தில் வரும் போது பிரயாணிகள் வழி காட்ட 5 ஆம் திகதி முத்திரச் சந்தையை வந்தடைந்து. மறுபடியும் கால் நடையாக மூட்டை முடிச்சுக்களுடன் தேனீக்கள் முகாமைத் தேடிக் கண்டு பிடித்து அங்கு தஞ்சமடைந்துள்ளது இக்குடும்பம்.

இச்சோகக்கதை நீறு பூத்த நெருப்பு. நினை வென்ற

புலிகளுக்கும் ஏற்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறியிருந்தார். இதையே அவரது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இப்பொழுது அடிக்கடி சொல்லி வருகிறார்.

இவர்கள் சொல்வதுடன் மட்டுமல்ல சில இடங்களில் பழைய பாணியில் செயலிலும் இறங்கியுள்ளனர்,

தென்னிலங்கையில் ஜே வி. பி என்று சந்தேகிக்கப்பட்டவர்களையும்ஜே.வி பி. ஆதரவாளர்கள் என்றுசந்தேகிக்கப்பட்டவர்களையும் வெட்டியும் சுட்டும் குற்றுயிருடன் ரயர் போட்டுக் கொழுத்தியும் அட்டகாசம் செய்ததுபோல இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் கல்முனையிலும் மட்டக்களப்பிலும் செய்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் ஜே. வி. பி யினர் அல்லர் என்று இராணுவ உயர் அதிகாரிகள் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்திருந்தும் ஜே. வி. பி.யை அழிப்பதற்கு (அழிந்துவிட்டதா?) கையாண்ட அதே பாணியைக் கையாண்டு தமிழ் மக்களை அழிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிடலாமென பிரேமதாசா அரசு கனவு காண்கிறது.

ஜே. வி. பி.யின் நோக்கமும் இலட்சியமும் வேறு; விடுதலைப் புலிகளின் இலட்சியம் வேறு என்பதை பிரேமதாசா அரசு இன்னமும் தெரிந்து கொள்ளாதது வேடிக்கை மட்டுமல்ல வேதனையுமாகும்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தால் தமிழ்மண் அபகரிக்கப்பட்டு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்கும்திட்டத்தை எதிர்த்து தமிழ்மண்ணையும் மக்களையும் பாதுகாப்பதற்கும் தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு வழிவகுப்பதை இலட்சியமாகக் கொண்டு தமிழ்மக்களின் பூரண ஆதரவுடன் போராடுபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

இவர்களுடன் சிங்கள ஆதிக்கப் போட்டியிலீடுபட்ட ஜே. வி. பியை ஒப்பிடுவது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை சிறிலங்கா பிரேமதாசா அரசு இன்னமும் உணரவில்லையே!

ஜே. வி. பியை அழிப்பதற்கு சிங்களவர் மத்தியில் சிலரின் உதவி கிடைத்ததுபோல விடுதலைப்புலிகளையும் அழிப்பதற்கு சில புல்லுருவிகளின் உதவி கிடைத்து இருப்பதாக சிறிலங்கா அரசு நம்பிக்கை கொண்டிருக்கக் கூடும்.

தமிழ் மக்களைப் பாதுகாக்கவென்று ஆயுதம் ஏந்தி அதையே தமது சுயநலத்துக்காகப் பாவித்து சமூக விரோதச்செயல்களிலீடுபட்டு மக்கள் மத்தியில் நிற்க முடியாமல் தமிழ்நாட்டுக்கு தப்பியோடியவர்கள் இவர்கள்

அமைதிப்படை என்று வந்த இந்தியப்படையின் பாதுகாப்பில் இங்கு மீண்டும் வந்து விடுதலை புலிகளை அழிப்பதற்காகஇந்தியப்படையுடன்அன்றுகாட்டிக்கொடுக்கும் காரியங்களில் ஈடுபட்டவர்களும் இவர்களே.

சமூக விரோத நடவடிக்கைகளில் முதலில் ஈடுபட்ட இவர்கள் பின்னர் அந்நியப்படையுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை அழிக்கும் ஒரே நோக்கத்துடன் தேச விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி இவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றியதால்தான் அமைதிப்படை என்ற இந்திய இராணுவம் தனது மதிப்பையும் கௌரவத்தையும் இழந்து திரும்ப நேர்ந்தது.

இந்த மண் குதிரைகளை இப்பொழுதுசிறிலங்கா பிரேமதாசா அரசு நம்பி விடுதலைப் புலிகளை அழிக்க நினைப்பது வெட்கக்கேடு.

இந்திய இராணுவம் திரும்பிச் சென்றபோது அவர்களுடன் திரும்பிச்சென்ற இவர்கள் கடைசி நேரத்தில் நடத்திய கொலைகளும் கொள்ளைகளும் தமிழ் மக்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத கரியநாட்கள் அவை!

ஜே. வி. பி. பாணியிலும், காக்கைவன்னியர் கூட்டத்தின் உதவியினாலும் விடுதலைப் போராட்டத்தை, விடுதலைப் புலிகளை அழித்துவிட முடியாது.

கொக்காவில் இராணுவ முகாம் அழிப்பு; வல்வெட்டித்துறைக் கடலில் போர்க்கப்பல் தகர்ப்பு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு!

---

பதில் சொல்ல ஆரம்பித்தார்.

ஜூன் மாதம் 29ஆம் திகதி இந்த முகாமை ஆரம்பித்தோம். உடன் பிறப்புகளையும், பொருள்பண்டங்களையும் இழந்து அகதிகளான பலர் இங்கு இருக்கிறார்கள். இவர்களைப் பராமரிப்பதற்கு தாம் பணமாக எதையும் எதிர்பார்ப்பதில்லை பொருட்களாகத்தான் எதிர்பார்க்கிறோம். நாவலர் வீதி, பருத்தித்துறை வீதி, ஆடியபாதம் வீதி, கே. கே. எஸ். வீதிகளை உள்ளடக்கிய பகுதி மக்களின் ஆதரவுடன் தான் இம்முகாமை நாம் நிறுவியுள்ளோம் பொது நிறுவனங்களும் எமக்கு ஆதரவு தருகின்றன. சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை ஊழியர்கள், ஸ்ரீ சேவாஸ்சிரம கலாசார சங்கம், குரும்பசிட்டி சன்மார்க்க சபை, கோண்டாவில் மேற்கு பரராசசேகரப் பிள்ளையார் கோவில் அடியார்களும் மனம் உவந்து உணவுவகை, பால்மா, துணிலாம் அயலிலுள்ள டொக்டர்களும் உதவி செய்கிறார்கள். இவர்களைவிட இரண்டு பேரைச் சம்பளம் கொடுத்து வேலைக்கு அமர்த்தியுள்ளோம். ஒருவர் தொற்று நீக்கிகளைத் தெளித்து சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளார். மற்றவர் நன்கொடையாகக் கிடைக்கும் துணிமணிகளைக் கவனிக்கிறார். தேவைக்கதிகமான உடுப்புகள் முல்லைத்தீவு முகாம்களுக்கு அனுப்பி வைக்கிறோம் என்றார் ஐங்கரன்.

அருகே சமையலறை இருப்பதாக அறிந்து அங்கே சென்றோம். அடுப்பு நெருப்புச் சீட்டில் யூனிவேர்சல் மாணவர்கள் உடம்பு முழுக்க வியர்த்துப் போயிருந்தார்கள். காட்சியை நம்பமுடியவில்லைத்தான். யூனிவேர்சல் மாணவர்கள் நளபாகத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அனுபவத்தில் இப்படியொரு தொழில் பரீட்சையம் இல்லா

சிலர் இறந்தும் போனார்கள். 7 ஆம் கட்டையிலும் ஷெல் விழுந்தது. 35 பேர் இறந்து போனார்கள்.

இப்பெண்ணின் சொந்த ஊர் திருக்கோணமலையில் உள்ள உப்புவெளிக் கிராமம். பலசரக்குக் கடை வருமானம் திகதியன்று உப்புவெளியை விட்டு வெளியேறி சாம்பல் தீவுக்கு ஓடத்தொடங்கினோம். எம்மோடு சேர்ந்து மக்கள் சாரை சாரையாக ஓடினார்கள். திரும்பிய திசை அவர்கள் தங்கியிருந்த நாட்கள், திகதி ஒன்றும் தெரியாது. இது தடுமாறிய உண்மை. தீர்த்தக்கரையிலிருந்து அளம்பிலுக்கு வர ரூபா 150/- ஓட்டிகள் வசூலித்தார்களாம். இது எரிகிற வீட்டில் கொள்ளி பிடுங்கிய கதை. முதலாம் திகதி (ஜூலை) அளம்பிலை அடைந்து அங்கிருந்து வாகனத்தில் வரும் போது பிரயாணிகள் வழிகாட்ட 5 ஆம் திகதி முத்திரச் சந்தையை வந்தடைந்து. மறுபடியும் கால் நடையாக மூட்டை முடிச்சுக்களுடன் தேனீக்கள் முகாமைத் தேடிக் கண்டு பிடித்து அங்கு தஞ்சமடைந்துள்ளது இக்குடும்பம்.

இச்சோகக்கதை நீறு பூத்த நெருப்பு. நினைவென்ற காற்று வீசும் போதெல்லாம் அது எரியத் தொடங்கும்.

திருநெல்வேலி என்றதுமே காய்கறிச் சந்தையும், சனக் கூட்டமும்தான் நினைவுக்கு வந்து போகும். ஆனால் இப்போது வேறு. திருநெல்வேலியை அடுத்துள்ள யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயக் கட்டடத்தில் கந்தர் மடம் யூனிவேர்சல் (தனியார்) கல்வி நிறுவனம் சமூகசேவைப் பிரிவான தேனீக்கள் மனித நேயத்துடன்நடாத்தும்இடம்பெயர்ந்தோருக்கான முகாம் இக்கட்டான இந்த நேரத்தில் தேனீக்கள் எடுத்த ஒரு நல்ல முடிவு- இடம் பெயர்ந்தோர் முகாம்.

---

## சோவியத் கம்யூனிஸ்ட்டு கட்சி

# உபதலைவராககோர்பசேவ் ஆதரவாளர் தெரிவு

(மாஸ்கோ)

சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவராக நார்மிகுவாகோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவின் ஆதரவாளரும் உக்கிரேயின் குடியரசின் பிரதிநிதியும் ஆவர்.

கடந்தவாரம் நடைபெற்ற பொதுச் செயலாளருக்கான தெரிவில் அதிகப்படியான வாக்குகளால் கொர்பசேவ் தெரிவு செய்யப்பட்டதும் துணைத்தலைவரின் வெற்றிக்கு வழி கோலாக அமைந்துள்ளது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

துணைத்தலைவராகதெரிவு செய்யப்பட்டுள்ள குவாக்கோ 2109 வாக்குகளைப் பெற்றார். இவருக்குப் போட்டியாக நின்ற எதிர்க்கட்சியினர் 274 வாக்குகளை மட்டும் பெற்றார்.

துணைத் தலைவராகதேர்ந்தெடுக்கப்பட்ட குவாக்கோ தனது முதலாவது உரையில் பேசும் போது ''கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து தொடர்ந்து உறுப்பினர்கள் பிரிவதை தடுப்பதே'' என்று குறிப்பிட்டார்.

உக்கிரேனில் அவர் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஆதரவாக பல பிரச்சாரங்களை மேற்கொண்டார்.லித்வேனியாலட்வியா போன்று உக்கிரேனும் தனி அரசாக பிரிந்து போகாமல் இருப்பதற்கு இவரது நடவடிக்கையே முக்கிய காரணம் என்றும் கூறப்படுகிறது.

இவரின் இவ் வெற்றியானது ஜனாதிபதி கொர்பசேவிற்கும் அவரது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பெரும் ஆதரவை அளித்திருக்கிறது என்றும் இவரது மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு பெரும் ஆதரவு இருக்கிறது என்பதையும் காட்டுவதாக இருக்கிறது.

## தமிழ் நாட்டிற்கு நாளாந்தம் 3000 அகதிகள்

(சென்னை)

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இருந்து சுமார் ஒரு லட்சம் அகதிகளை தாம் எதிர்பார்ப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. கடந்த சில மாதங்களாக நிலவிவரும் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து நாளாந்தம் 3000 அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்துள்ளனர் என்றும் இதன்படி நோக்கின் தாம் ஒரு லட்சம் அகதிகளை எதிர்பார்ப்பதாகவும் அறிவித்துள்ளது.

5000 அகதிகள் வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மக்கள் அனுப்பப்படுவார்கள் என்றும், இதற்கான சகல ஒழுங்குகளையும் தாம் தயார் செய்திருப்பதாகவும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

சகல புகையிரத நிலைய அதிபர்களுக்கும் மேலதிகமாக மூன்று நான்கு பெட்டிகள் சேர்க்கும்படி கோரியிருப்பதாகவும், கல்யாண மண்டபங்கள், சத்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அகதிகள் மறுவாழ்வு அதிகாரி சி. என். ராம்தாஸ் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசு அறிவித்தபடி வயது வந்த அகதிகளுக்கு இதுவரை வழங்கிவந்த 110 ரூபா 150 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மாதத்திற்கு இரண்டு முறை வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ் அகதிகளுக்கான சகல வசதிகளையும் எடுப்பதற்கு மத்தியஅரசு தன்னாலான சகல உதவிகளையும் வழங்கும் எனவும் அறிவித்திருக்கிறது,

## ஹரியானா முதலமைச்சராக மீண்டும் சௌதாலா!

(சண்டிகார்)

இந்தியாவின் வடமாநிலமான ஹரியானாவின் முதலமைச்சராக ஓம் பிரகாஷ் சௌதாலா மீண்டும் பதவி யேற்றிருக்கிறார்.

கடந்த இரண்டு மாதங்களின் முன் நடைபெற்ற மேஹம் இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் அம் மாநிலத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு காரணகர்த்தா என்றவகையில் பதவி விலகும் படி கேட்டிருந்தார்.

இவரின் பதவியேற்பானது இந்திய அரசியல் கட்சிகளிடையே பலத்தகருத்து முரண்பாடுகளை தோற்றுவித்திருக்கிறது.

இந்திராகாங்கிரஸ் சார்பில் கருத்து வெளியிட்ட எம்.ஜே. அக்பர் மீண்டும் ஓம்பிரகாஷ் சௌதாலை நியமித்தமையானது வி.பி.சிங்கின் பண்பற்ற அரசியல் என்னஎன்பதைபுலப்படுத்தி உள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் சி. பி. ஐ யின் விசாரணைக்குப் பின்னரே அவரை முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்று வி.பி. சிங் முன்னர் கூறியதைதான் நினைவுபடுத்துவதாகவும் எம்.ஜே.அக்பர் குறிப்பிட்டார்.

பாரதீய ஜனதாக் கட்சி சி.பி.ஐ யின் அறிக்கைவெளிவரும் வரை பொறுத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்தது.

இக் கட்சியின் சார்பில் கருத்து வெளியிட்ட கிருஷ்ணலால்சர்மா மேஹம் தொகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாகசி.பி.ஐ. விசாரணை நடத்தியதாகவும், அதன் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து ஓம் பிரகாஷ் சௌதாலா பதவியேற்றிருக்கலாம் எனவும் கருத்துவெளியிட்டார்.

## முன்னாள் அமைச்சர்கள் கட்சியில் இருந்து நீக்கம்

(சென்னை)

கட்சியின் கட்டுப்பாட்டை மீறினார்கள் என்னும் குற்றச்சாட்டின் பேரில் மூன்று முன்னாள் அமைச்சர்கள் உட்பட பதினாறு பேர் அனைத்திந்திய அ. தி. மு. கவிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக மேற்படி கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

திரு. ப. குழந்தைவேலு திரு. திருநாவுக்கரசு, திரு. எஸ். இராமச்சந்திரன் ஆகியோரே கட்சியிலிருந்து விலக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களாவர்.

முப்பத்தைந்து பேரைக் கொண்ட மேற்படி கட்சியின் உயர்மட்டக் குழுவுக்கு மேலும் நாற்பத்தொன்பது பேர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதாக அனைத்திந்திய அ. தி. மு. க விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

Registeured as News Paper at the G. P. O.

# ஈழநாதம்

# மானத்தைக் காக்கவாவது பெண்கள் ஆயுதமேந்த வேண்டும்

(கிளிநொச்சி)

தமிழ்ப்பெண்கள் தமது மானத்தைக் காத்திட தமிழீழ தாயகத்தை மீட்டிட கையில் துப்பாக்கி ஏந்திப் போராட வேண்டும். அதை விடுத்து அடுப்பை ஊதுவதும்குழந்தை குட்டிகளைப் பெறுவதும் தான் பெண்களின் கடமை என்று இருக்கக்கூடாது. அப்படி இருந்த பல பெண்கள் தான் இன்று இனவாத ஸ்ரீலங்கா அரசின் இராணுவ வெறியர்களால் பாலியல்வன் முறைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு துணுக்காய் உயிலங்குளத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி பிரபா மேற்கண்டவாறு கூறினார்.

முகிலன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செல்வி பிரபா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அடுப்பங்கரையில் இருந்து பணிவிடை செய்வதுதான் பெண்களுக்கு கௌரவம் என்று எண்ணியிருந்த பெண்களே கூடுதலாக ஸ்ரீலங்கா இராணுவ வெறியர்களால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். எம்மைப் போன்று கழுத்திலே குப்பியும் கையிலே துப்பாக்கியும் ஏந்திய எந்தப் பெண்ணையும் இதுவரை இராணுவ வெறியர்களால் பாலியல் வன்முறைக்குட்படுத்த முடியவில்லை. ஆதலால் பெண்கள் தமது மானத்தைக் காக்கவாவது ஆயுதமேந்திப் போராட முன்வர வேண்டும் என்றார்.

வவுனிக்குளப் பிரதேசப் பொறுப்பாளர் செல்வன் இ. நிமால் பேசுகையில் கூறியதாவது-

விடுதலைப் புலிகள் வேறு ஒரு நாட்டையோ அரசையோ நம்பிப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. தமிழ்மக்களையும் இயக்கத்தையும் நம்பியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழினத்தின் வரலாற்றில் என்றுமே கண்டிராத அளவிற்கு போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தமிழினத்தை பூண்டோடு அழிப்போம் என்று கங்கணங் கட்டிக் கொண்டு பல ஆயிரக் கணக்கில் இராணுவம் வட பகுதியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இந்த இராணுவத்தை விரட்டிஅடிக்கும்வரை விடுதலைப் புலிகள் ஓயமாட்டார்கள். இந்தப் போராட்டத்தில் ஒவ்வொரு இளைஞனும்யுவதியும் தம்மை இணைத்துக் கொள்ள முன் வரவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சுயநலத்திற்காகவோ அன்றி பயத்தினாலோ இதுவரை எதையும் விட்டுக் கொடுத்ததில்லை. இனியும் விட்டுக் கொடுக்கப் பேரவதுமில்லை. இதை ஒவ்வொரு தமிழ் மகனும் நன்கு உணர வேண்டும்.

இன்று எம்மால் முகாம்களில் முடக்கி வைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தை மீட்க அரசு முயற்சிக்கிறது. இராணுவம் வெளியே வெளிக்கிடுமானால் நாம் பாரியஅழிவை எதிர்நோக்க வேண்டிவரும். அந்த அழிவைத் தடுக்க வேண்டியது தமிழ் மக்கள் சகலரினதும் கடமையாகும். ஆதலால் சகல தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கையில் ஆயுதமேந்தவேண்டியவேளை வந்து விட்டது. அதற்கு உங்களைத் தயார் படுத்துங்கள் என்றார். (49)

## உண்மைக்கும் புறம்பான செய்திகளை தொடர்புசாதனங்கள் வெளியிடுகின்றன

### பல்கலைக்கழக இணைப்புக்குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசின் கட்டுப்பாட்டில்இயங்கும் தொடர்பு சாதனங்கள் வடக்கு கிழக்கு நிலைமைகள் பற்றி உண்மைக்குபுறம்பான தகவல்களை தினமும் வெளியிட்டு வருவதாக யாழ். பல்கலைக் கழக ஆசிரியர், ஊழியர், நிர்வாக உத்தியோகத்தர், மாணவர் ஒருங்கிணைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தற்போதுள்ள போர் தமிழ் மக்களுக்கு எதிரான போர் இல்லை என்று எவ்வளவுதான் இச்சாதனங்கள் காட்ட முயன்ற போதிலும் வடக்கு கிழக்கு சம்பவங்கள் தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளுக்கு குரல்கொடுக்க முடியாத வகையில் முழுத் தமிழ் சமூகத்துக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக்கை என்பதையே காட்டுகின்றன.

இவ்வாறாக இன்று எண்ணற்ற சங்கடங்களுக்கும், தாங்கொணாத் துயரங்களுக்கும் உட்பட்டிருக்கும் நாம் இதற்கு காரணமாகவுள்ள அரசின் நடவடிக்கைகளை வன்மையாக கண்டிப்பதுடன், இன்றைய யதார்த்த நிலையினை சர்வதேச சமுகத்தின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கொக்காவில் முகாம் தாக்குதலில் மாணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தி நேற்று யாழப்பாண பகுதியில் தோரணங்கள் கட்டப்பட்டன. எழுச்சிப்பாடல்களும் இசைக்கப்மட்டன.

## கசிப்பு வடித்தவர்கள் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ரயில் நிலையத்துக்கு முன்பாக உள்ள வீடொன்றில் நேற்று நண்பகல் சிலர் கசிப்பு வடித்துக் கொண்டிருந்தபோது விடுதலைப்புலிகள் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

கடந்த வாரம் பதுங்குழிக்குள் சீனி மூடைகள் மறைத்து வைத்தபோது பிடிபட்டவர்களே வேறொரு வீட்டில் இதனைச் செய்யும் போது அகப்பட்டனர்.

## அகதிமுகாம்கள் பற்றி நாளாந்த அறிக்கை சமர்ப்பிக்க பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

ஒரு சில உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்குப் போய் முகாம்களை மேற்பார்வை செய்வதில்லை என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து, கிராம சேவையாளர்கள் ஒவ்வொரு நாளும் அகதி முகாம்களைப் பார்வையிட்டு நாளாந்த அறிக்கை சமர்ப்பிக்கும்படி அரசாங்க அதிபரினால் பணிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை உதவி அரசாங்க அதிபர்களும் பிரச்சினைகள் உள்ள பகுதிகளுக்குக் கூடுதலாக விஜயம் மேற்கொண்டு, பிரச்சினைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று சனிக்கிழமை காலை கச்சேரியில் நடைபெறவுள்ள இடம்பெயர்ந்தோர்களுக்கான கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படியும், வேண்டிய விவரங்களையும் சமர்ப்பிக்கும்படியும் உதவி அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

## வெளி மாவட்டத்தவருக்கே நிவாரணத்தில் முன்னுரிமை

(ஈச்சமோட்டை)

இடம்பெயர்ந்த அகதிகளுக்கான இரண்டாம் கட்ட நிவாரணப் பொருள்கள்வழங்குவது வெளிமாவட்டங்களில் இருந்து தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்போருக்கே முன்னுரிமை வழங்கப்பட இருக்கிறது.

தற்போது திருக்கோணமலை மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் தங்கியிருப்போருக்கு நிவாரணம் வழங்குவதற்கான வேலைகள் அந்தந்த கிராமசேவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கான 2-ம் கட்ட நிவாரணம் அந்தந்த கிராம சேவையாளரின் உதவியுடன் யாழ். செயலக அதிகாரிகளினால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே வழங்கப்படும் எனவும்; அகதிகள் தத்தம் அகதிமுகாம் செயலக அதிகாரிகள் திடீரென வரும் போது நிற்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (43)

## பணம் வேண்டி பல மாதம்; மண்வெட்டி வழங்கவில்லை

ஆவரங்கால், அச்சுவேலிப் பகுதியில் மண்வெட்டி வழங்குவதற்கென அப்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் 185 ரூபாவை அறவிட்டு பல மாதங்களாகியும் இன்னமும் மண்வெட்டி வழங்கப்படவில்லை என்று இக்கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

வங்கி மூலம் தொழில்திறன் ஊக்குவிப்புப் பணம் 4000 ரூபா வழங்கப்பட்ட போது அதிலிருந்து ஒவ்வொரு விவசாயியிடமிருந்து 185 ரூபா வீதம் கழிக்கப்பட்டதாக இவர்கள் தெரிவித்தார்கள். (75)

## லொறியில் கொள்ளை

(கொழும்புத்துறை)

கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த லொறியொன்று மாத்தளையில் வைத்து வழிமறிக்கப்பட்டு அதில் கொண்டுவரப்பட்ட ஆறு மூடை பருப்பு, சீனி, பெற்றோல், டீசல் உட்பட பெறுமதிமிக்க சகல பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

லொறி உரிமையாளர் மிக்க கஷ்டப்பட்டு உயிரைக்கையில் கொண்டு யாழ்நகர் வந்து சேர்ந்துள்ளார். இவர் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனத் தெரிய வருகிறது. (24)

## 35 அகதிகள் சிறிலங்கா கடற்படையால் மூழ்கடிப்பு

(சென்னை)

இந்தியா சென்ற 35 பேர்கள் அடங்கிய தமிழ் அகதிகள் படகொன்று சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி கடலுள் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

இதில் பயணம் செய்தவர்களில் ஆண்கள் நீந்தி தனுஸ்கோடியை அடைந்து விட்டதாகவும்; எஞ்சியோரில் பெண்கள் ... வரும் கடலுக்கு பலியாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை சிறிலங்காவின் கடற்படையினர் இந்திய கடல் எல்லைக்குள் புகாது கண்காணிக்கும் வகையில் இந்திய கடற்படை கப்பல்கள் இரண்டு இராமேஸ்வரம் பகுதியில் நிலை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வேலைக்கு திரும்புவது பற்றி ஆராய்வு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவங்கிகளின் ஊழியர்களும் அரச திணைக்கள ஊழியர்களும் தாங்கள் கடமைக்குத் திரும்புவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் நகரில் கூடி ஆராய இருக்கிறார்கள்.

திங்கள் காலை 9.30 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் இந்த சந்திப்பு இடம்பெறும் என்று மேற்படி மன்னார் மாவட்ட வங்கி ஒன்றின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (75)

## திருநாவக்குளத்தில் புலிகள் - இராணுவம் மோதல் இராணுவம் முகாம் திரும்பியது

(மன்னார்)

திருநாவக்குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதலில் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

இவர்கள் பின்வாங்கிச் செல்லும்போது முலத் தோட்டம் என்னும் இடத்தில் உள்ள ஐந்து வீடுகளை எரித்துவிட்டுச் சென்றுள்ளனர். (ம)

## தமிழ் நாட்டில் அ.தி.மு.கழகம் மீண்டும் பிளவு பட்டுள்ளது

பேசுகையில் கூறியதாவது:

அடுப்பங்கரையில் இருந்து பணிவிடை செய்வதுதான் பெண்களுக்கு கௌரவம் என்று எண்ணியிருந்த பெண்களே கூடுதலாக ஸ்ரீலங்கா

என்றுமே கண்டிராத அளவிற்கு போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தமிழினத்தை பூண்டோடு அழிப்போம் என்று கங்கணங் கட்டிக் கொண்டு பல ஆயிரக்

மண்வெட்டி வழங்கப்படவில்லை என்று இக்கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கவலை

வீதம் கழிக்கப்பட்டதாக இவர்கள் தெரிவித்தார்கள். (75)

# 35 அகதிகள் சிறிலங்கா கடற்படையால் மூழ்கடிப்பு

(சென்னை)

இந்தியா சென்ற 35 பேர்கள் அடங்கிய தமிழ் அகதிகள் படகொன்று சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி கடலுள் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

இதில் பயணம் செய்தவர்களில் ஆண்கள் நீந்தி தனுஸ்கோடியை அடைந்து விட்டதாகவும்; எஞ்சியோரில் பெண்கள் குழந்தைகள் உட்பட அனைவரும் கடலுக்கு பலியாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை சிறிலங்காவின் கடற்படையினர் இந்திய கடல் எல்லைக்குள் புகாது கண்காணிக்கும் வகையில் இந்திய கடற்படை கப்பல்கள் இரண்டு இராமேஸ்வரம் பகுதியில் நிலை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்குள்ளும், பிறமாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கும் இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் கூட்டம் ஒன்று, எதிர்வரும் திங்கட்கிழமை காலை10 மணியளவில் கல்வித் திணைக்கள வளாகத்திலுள்ள நல்லூர் ஸ்தான சி. சி. தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும் என்று தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கான ஜூன் மாதச் சம்பளக் கொடுப்பனவு, விசேட லீவு,இடம் பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்சினைகள் பற்றி முக்கியமுடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் யாழ். மாவட்ட சங்க நிர்வாகிகளையும், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கிளைகளின் தலைவர், செயலாளர்களையும், இடம்பெயர்ந்த வெளி மாவட்ட நிர்வாகிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளாளர்.

# கிராமிய உற்பத்திக் குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

நெருக்கடியான சூழ்நிலையில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பயிர்செய்கை, உணவு உற்பத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு மானிப்பாயில் கடந்த செவ்வாய் கிழமை காலை 10 மணிக்கு நடத்தப்பட்டது. சகல சன சமூக நிலையங்கள் விவசாய சங்கங்கள், மக்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் ஒவ்வொரு அமைப்பு சார்பாகவும் கிராமிய உற்பத்திக் குழுக்கள் உருவாக்கப்பட்டு தத்தம் பிரதேசத்திற்குரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு பணிக்கப்பட்டுள்ளது.

### பிரேமா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறன் பிரதமர் வி. பி. சிங்கை நேரில் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி தமிழகத்தின் நிலையை எடுத்துச் சொல்வார் என்றும் முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

### கிளிநொச்சி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரவு ஏழரை மணியளவில் பொம்மர் விமானம் ஒன்று வட்டமிட்டு குண்டுமாரி பொழிந்ததில் பேப்பர்கடை, ஹோட்டல் மற்றும் பல கட்டடங்கள் சேதமாகின. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிட்டதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கொக்காவில் இராணுவ முகாம் புலிகளால் முற்று முழுதாக உடைத்து சேதமாக்கப்பட்டதை அடுத்து ஆத்திரம்கொண்ட விமானப்படையினர் பாரிய குண்டுகளை ஒரு மணிநேரத்திற்கு மேலாக வீசினர். (49)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது

# வேலைக்கு திரும்புவது பற்றி ஆராய்வு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவங்கிகளின் ஊழியர்களும் அரச திணைக்கள ஊழியர்களும் தாங்கள் கடமைக்குத் திரும்புவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் நகரில் கூடி ஆராய இருக்கிறார்கள்.

திங்கள் காலை 9.30 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் இந்த சந்திப்பு இடம்பெறும் என்று மேற்படி மன்னார் மாவட்ட வங்கி ஒன்றின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (75)

# தமிழ் நாட்டில் அ.தி.மு.கழகம் மீண்டும் பிளவு பட்டுள்ளது

(சென்னை)

தமிழ் நாட்டில் அனைத்தி இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் பிளவுபட்டுவிட்டது.

நேற்று முன்தினம் இக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் முன்னாள் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசு தலைமையில் புதிய குழுவாக சேர்ந்துள்ளது.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கட்சியின் அடிப்படை உறுப்பினர்களால் பொதுச்செயலாளர் பதவிக்கு நெரிவுசெய்யப்பட வில்லை என்று திரு. திருநாவுக்கரசு செய்தியாளரிடம் கூறினார்.

எனவே தங்களை செல்வி ஜெயலலிதா கட்சியில்இருந்து நீக்குவதற்கு அதிகாரம் இல்லை.

தாங்கள் ஆளும் கட்சியான தி. மு. க. வில் சேரும் எண்ணமோ அல்லது புதிய கட்சி அமைக்கும் எண்ணமோ இல்லை

மறைந்த தமிழக முதல்வர் எம். ஜி ஆரின் ஆட்சியை மீண்டும் தமிழ் நாட்டில் ஏற்படுத்த பாடுபட வேண்டும்

இவ்வாறு அவர் கூறினார்.

### யானைப்பசிக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் இவ்வளவு சிறிய தொகை உணவுப்பொருள்கள் வந்துள்ளதால் என்ன பயன் என்று அரச அதிபரிடம் வினவியபோது இந்த பதின் மூன்று லொறிகளும் வெள்ளோட்டமாகவே பொருட்களை ஏற்றி வந்துள்ளன. இந்த முயற்சியின் வெற்றியை அனுசரித்து இனிமேல் வாரம் 3 தடவைகளாயினும்பதினைந்து லொறிகளுக்கு குறையாத அளவு தென்னிலங்கைக்கு அனுப்பி பொருள்களை ஏற்றிவர முயற்சி மேற் கொள்ளப்படும் என்று கூறினார்.

5 லொறி மாவும் 3 லொறி சீனியும், ஒரு லொறிஅரிசியும், ஒரு லொறி பால் மாவும், ஏனையவற்றில் மருந்துப் பொருள்களும் வந்துள்ளன. (76)

### தமிழருக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

தமிழர் பிரச்சினைபற்றி விரிவாக ஆராய்வதற்கு புகழ் பெற்ற இந்தியர்களைக் கொண்ட குழுவொன்றை இலங்கைக்கு விரைவாகஅனுப்பப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அனுப்பும் உதவிகளுக்கு இலங்கை இராணுவப் படையும், தமிழீழ விடுதலைப்புலிகளும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் திரு. கிருஷ்ணய்யர் அவர்கள் கேட்டுள்ளார்.

### கோட்டை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லேயே விழுந்துள்ளமையால் பெரும்பாலான வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் குண்டு ஒன்று விழுந்து வெடித்ததில் மைதான மதிற்சுவர் உடைந்ததுடன் ஐஸ்பிலான் வீதியில் உள்ள சிம்மியான் பிலிப், ரஜேஸ்வரன், எட்பேட், ஸஸ்ரின், வதனி ஆகியோரது வீடுகள் பெருமளவு சேதத்திற்குள்ளாகியுள்ளன.

குருநகரில் ஓடக்கரை வீதியில் விழுந்த குண்டு ஒன்று வெடித்ததில் மகேஸ், சூசப்பிள்ளை, மரியதாஸ், சீவரட்ணம், ஏ. ஜோசப் இல: 31 ஆகியோரது வீடுகள் கடுமையாக சேதமடைந்துள்ளன: மூன்று சிறார்கள் காயமடைந்துள்ளனர்:

ராஜேந்திரா வீதியில் ஒரு குண்டு விழுந்து வெடித்ததில் இ. ராஜேந்திரம், றொசரியோ, அகஸ்தீன், செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரது வீடுகள் பெருமளவு சேதமடைந்துள்ளதுடன் பங்கங்களிலுள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளன. (ம)

அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று சனிக்கிழமை காலை கச்சேரியில் நடைபெறவுள்ள இடம்பெயர்ந்தோர்களுக்கான கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படியும், வேண்டிய விவரங்களையும்

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் தங்கியிருப்போருக்கு நிவாரணம் வழங்குவதற்கான வேலைகள் அந்தந்த கிராமசேவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் இருந்து

## திருநாவக்குளத்தில்

# புலிகள் - இராணுவம் மோதல் இராணுவம் முகாம் திரும்பியது

(மன்னார்)

திருநாவக்குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதலில் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்றுத் தள்ளாடிமுகாமில் இருந்து வெளியேறி திருநாவக்குளத்தில் தரித்துநின்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து சிங்கள இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர்.

இவர்கள் பின்வாங்கிச் செல்லும்போது முலத் தோட்டம் என்னும் இடத்தில் உள்ள ஐந்து வீடுகளை எரித்துவிட்டுச் சென்றுள்ளனர். (ம)

### சோதனையின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில அமைச்சர்களும் தமிழ் நாட்டில் உள்ள அகதி முகாம்களை பார்வையிட்டு வேண்டிய உதவிகளை கவனித்து வருகின்றனர்.

தமிழகம் வரும் அகதிகளை சரியாக கவனிக்காத அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் கூறினார்.

### ஹேமாபிரேமா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு உற்சாகம் அளித்து அளவளாவினார். உணவுப் பொருட்கள், பரிசுகளையும் அவர் வழங்கினார்.

விமானப்படைத் தளபதியின் மனைவியும் அங்கு சென்றிருந்தார்.

### நிலாவெளி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளான கேதீஸ், அரசன் ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

இம்மோதலின் இறுதியில் இராணுவத்தினர் இழப்புகளுடன் முகாம் திரும்பினர் (மு.

# லொறியில் கொள்ளை

(கொழும்புத்துறை)

கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த லொறியொன்று மாத்தளையில் வைத்து வழிமறிக்கப்பட்டு அதில் கொண்டுவரப்பட்ட ஆறு மூடை பருப்பு, சீனி, பெற்றோல், டீசல் உட்பட பெறுமதிமிக்க சகல பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

லொறி உரிமையாளர் மிக்க கஷ்டப்பட்டு உயிரைக்கையில் கொண்டு யாழ்நகர் வந்து சேர்ந்துள்ளார். இவர் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனத் தெரிய வருகிறது. (24)

# யாழ்.மாவட்ட சர்வோதயத்திற்கு லொறிமூலம் உணவு வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வோதயத்திற்கும் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் லொறி மூலம் நேற்று வந்து சேர்ந்தன. இத்தொகுதியில் மருந்துவகை உணவுப்பொருட்கள் பால் மாவகை என்பன அடங்கியுள்ளன. இப் பொருட்கள் அகதிகள் முகாமிற்கு விரைவில் பகிர்ந்தளிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இது ஒரு பரீட்சார்த்த முயற்சி என்றும் தொடர்ந்தும் பொருட்களை வடபகுதிக்கு அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ். சர்வோதயப்பிரதிநிதிதெரிவித்தார்(மு)

# ரூபா 1500 மேல் வருமானம்; உலர்உணவுவழங்கவேண்டாம்

## -யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

ரூபா 1, 500 க்குமேல் வருமானம் பெறுபவர்களுக்கு உலர் உணவு வழங்கவேண்டாம் என்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் அனைத்து உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பணித்துள்ளார்.

இதற்கான தகுந்த நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறும் உதவி அரசாங்க அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி பணிப்புரை தை 12 - 1990 திகதியிட்ட சமூக சேவைப்பணிப்பாளரது சுற்றுநிருபத்திற்கு அமையவேபிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாத வேதனம் வழங்கப்படாத நிலையில் உணவுப் பண்டங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில் ரூபா 1500 க்குமேல் வருமானமுள்ளவர்களுக்கு உலர் உணவு வழங்கப்படமாட்டாதென்றபணிப்புரையினால்அரசாங்க ஊழியர்கள் பெரிதும் பாதிக்கலாம் என்று உயர் அரசாங்கஅதிகாரிஒருவர்தெரிவித்தார் முகாம்களில்அகதிகளாக இருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும்,இடம்பெயர்ந்தோர்களுக்குமிப்பணிப்புரையின்பிரகாரம்உலர்உணவுவிநியோகம் நிறுத்தப்படலாம்.

# தமிழ் நாட்டு அரசுக்கு மத்தியஅரசுஉதவவேண்டும்

(சென்னை)

தமிழ்நாட்டில் வந்து குவிந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தமிழ்நாடு அரசு உதவுவதற்கு போதிய உதவிகளை மத்திய அரசு உதவ வேண்டும் என தமிழ்நாட்டுப் பாரதீய ஜனதாக்கட்சித் துணைத்தலைவர் ஜனா. கிஸ்ணமூர்த்தி பிரதமர் வி. பி. சிங்கிற்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் இவ் அகதிகள் பிரச்சினை தமிழ்நாட்டு அரசிற்கு பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றிவிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.